
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1276

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

170

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த அ.மகாதேவன் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# அ.மகாதேவன்; அக்ரஹாரத்தில் உதித்த அதிசய மனிதர்!

பிறப்பு மனிதனின் தேர்வு அல்ல; ஆனால், கொள்கையைத் தேர்ந்தெடுப்பது அவனது முடிவு. அந்த முடிவுதான், சிலரை வரலாற்றில் நிலைநிறுத்துகிறது. அப்படிப்பட்டவர்களில் ஓர் உடன்பிறப்புதான், திருப்பத்தூர் அ.மகாதேவன். அக்ரஹாரத்தில் பிறந்தவர். ஆனால், கொள்கையால் திராவிட இயக்கத்தின் அடித்தளத் தொண்டர். 'அக்ரஹாரத்தில் உதித்த ஓர் அதிசய மனிதர்' என்று முத்தமிழறிஞர் கலைஞர் பாராட்டிய உடன்பிறப்பு. சிவகங்கை மாவட்டக் கழகத்தினர் அவருக்கு செல்லமாகச் சூட்டியிருந்த பெயர் 'மகாதேவன் மாமா'.

பிறப்பால் பிராமணர். ஆனால், வாழ்க்கை முறையைத் திராவிட இயக்கத் தொண்டராகக் கொண்டவர். ஆரியத்தை எதிர்க்கும் திராவிடச் சிந்தனையை ஏற்றுக்கொண்டு, சமூக நீதிக்காக தனது இறுதி மூச்சுவரை கழகக் கொடியை உயர்த்திப்பிடித்தவர்.


1936-ஆம் ஆண்டு மே 11-ஆம் தேதி, இன்றைய தென்காசி மாவட்டம், கடையநல்லூரில், அய்யாவு - இலட்சுமி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். வழக்கமான அக்ரஹார வாழ்க்கையில் வளர்ந்தாலும், இளம்வயதில் அவர் கேட்ட பகுத்தறிவுப் பிரச்சாரத்தின் தாக்கம், அவரை வேறு பாதைக்கு அழைத்துச் சென்றது.

பள்ளியில் படித்துக்கொண்டிருந்த 14 வயதில், தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பிரச்சாரத்தை நேரில் கேட்டார். மூடநம்பிக்கைகளையும் சாதி ஆதிக்கத்தையும் பெரியார் சாடிய விதம், அவரது சிந்தனையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதே காலகட்டத்தில் பேரறிஞர் அண்ணாவின் உரைகளும் சமூக நீதியின் அவசியத்தை எடுத்துரைத்த முத்தமிழறிஞர் கலைஞரின் 'பராசக்தி' வசனங்களும் அவரது உள்ளத்தில் அழுத்தமாகப் பதிய, 16 வயதிலேயே கழகக் கொடி ஏந்தி, சிவகங்கை கழகத்தினருடன் ஐக்கியமானார். அப்போதிலிருந்தே சாதி சார்ந்த தனது அடையாளங்ளைத் துறந்து, அடித்தட்டு மக்களுக்கான அரசியலை ஏற்றுச் செயல்படலானார்.

**எஸ்.எஸ்.தென்னரசு அவர்களிடம் அரசியல்**

அவரது அரசியல் வாழ்வில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியவர், கழகத்தின் ஒன்றுபட்ட இராமநாதபுரம் மாவட்டச் செயலாளராகவும், பின்னாட்களில் அமைப்புச் செயலாளருமாக இருந்த 'சிறைப் பறவை' எஸ்.எஸ்.தென்னரசு அவர்கள். அவரைத் தனது அரசியல் வழிகாட்டியாகக் கொண்டு, கழகப் பணிகளில் ஈடுபாட்டுடன் செயல்பட்டார். தா.கிருட்டிணன், வே.தங்கப்பாண்டியன், இராம.சிவராமன் உள்ளிட்ட பல மூத்த முன்னோடிகளுடன் இணைந்து, தென் மாவட்டங்களில் கழகத்தை வலுப்படுத்திய தலைமுறையில் முக்கியமானவராக இருந்தார் மகாதேவன்.

கிளைக் கழகச் செயலாளராகத் தொடங்கிய அவரது கழகப் பயணத்தில், மாவட்டப் பிரதிநிதி, மூன்று முறை ஒன்றியச் செயலாளர், பத்தாண்டுகள் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர், மாவட்டப் பொருளாளர், தலைமைக் கழகப் பொதுக்குழு உறுப்பினர் என அடுத்தடுத்த பொறுப்புகள் அவரைத் தேடி வந்தன. இந்தப் பொறுப்புகள் அனைத்தும் கழகம் அவர்மீது வைத்திருந்த நம்பிக்கைக்கும், அவர் கழகக் கொள்கையில் கொண்டிருந்த உறுதிக்கும் சான்று என்கின்றனர், மாவட்டக் கழகத்தினர்.


ஓவியம் : ரவி பேலட்

"தேர்தல் வந்தாலே மகாதேவன் நினைவுக்கு வருவார்" என்று, அவரோடு அரசியல் பணிகளை மேற்கொண்ட கழகத்தினர் குறிப்பிடுகின்றனர். உள்ளாட்சித் தேர்தலாக இருந்தாலும், சட்டமன்றமாக இருந்தாலும், நாடாளுமன்றமாக இருந்தாலும், எந்த ஊரில் யாரை நிறுத்த வேண்டும், எந்த கிராமத்தில் யாரைச் சந்திக்க வேண்டும், எந்தச் சமூகத்தை எப்படிச் சென்றடைய வேண்டும் என்று, தேர்தல் வியூகங்களை அமைப்பதில், தேர்ச்சி பெற்றவராகத் திகழ்ந்தார்.

கழக அரசியல் என்பது தேர்தல் வெற்றி தோல்வி மட்டுமல்ல; கொள்கையை மக்களிடம் கொண்டு சேர்ப்பதும் ஆகும் என்பதற்கேற்ப, தமிழ்நாடு முழுவதும் தலைமைக்கழகச் சொற்பொழிவாளராகப் பயணித்தவர். பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோரின் சிந்தனைகளை ஆயிரக்கணக்கான மக்களிடம் எடுத்துச்சென்றார். மேடையில் பேசினாலும், அமைப்புப் பணியில் இருந்தாலும், ஒரு தொண்டனின் அடக்கத்தையும், நிர்வாகியின் பொறுப்புணர்வையும் ஒருசேர வெளிப்படுத்தியவர். தம்பியாகவும், உடன்பிறப்பாகவும் உறவுச் சொல் கொண்டு அழைக்கும் கழகத்தில், சிவகங்கைக் கழகத்தினர், 'மாமா' முறைவைத்து அழைக்கப்பட்ட உடன்பிறப்பு, இவர் ஒருவர்தான்.

கழகம் அறிவித்த எந்தப் போராட்டத்திலும் அவர் பின்வாங்கியதில்லை. அவசரநிலை காலத்தில் 'மிசா' சட்டத்தின் கீழ் சிறைத் தண்டனை அனுபவித்தார். அந்தக் காலத்தில் சிவகங்கை மாவட்டத்தினர் பலர் விலகிச் சென்றபோது, தென்னரசு அவர்களிடம் அரசியல் பயின்ற மகாதேவன் போன்றவர்கள்தான், கழகக் கொடி தாழாமல் உயர்த்திப்பிடித்தனர்.

> "அவரது உடலில் இருந்த தழும்புகள், தனிப்பட்ட காயங்கள் அல்ல; திராவிட இயக்க வரலாற்றின் அடையாளங்கள்!"

1986-ஆம் ஆண்டு, இந்தித் திணிப்புக்கு எதிராக, முத்தமிழறிஞர் கலைஞர், அரசியலமைப்புச் சட்டத்தின் ஆட்சிமொழிப் பிரிவு நகலை எரிக்கும் போராட்டத்தை அறிவித்தபோது, தயக்கமின்றி அதில் பங்கேற்று மீண்டும் சிறை சென்றார். "அவரது உடலில் இருந்த தழும்புகள், தனிப்பட்ட காயங்கள் அல்ல; திராவிட இயக்க வரலாற்றின் அடையாளங்கள்" என்கிறார், தலைமைக் கழகச் சொற்பொழிவாளர் காரைக்குடி கே.வி.ராமகிருஷ்ணன்.

மகாதேவன் அவர்கள் அடிக்கடி கேட்கும் கேள்வி, "கழக வளர்ச்சிக்காக நாம் என்ன செய்தோம்?" என்பதுதான். அதனால்தான், அவர் இறுதி வரை தேர்தல் வாய்ப்புகளைக் கேட்டுச் சென்றதில்லை. குறிப்பாக, அவரது 'நடந்து வந்த பாதை' என்கிற நூல், தென் மாவட்டங்களில் கழகத்தைக் கொண்டுசேர்த்த வரலாற்றினைப் பேசும் அரசியல் ஆவணமாக உள்ளது" என்கிறார்.

அந்த நூலுக்கு கலைஞர் அளித்த வாழ்த்துரையில்தான் 'அக்ரஹாரத்தில் உதித்த ஓர் அதிசய மனிதர். கழக வளர்ச்சிக்கு அனைவரும் பாராட்டும் வகையில், முழுமையாகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர்' எனப் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார்.

வயது மூப்பு நிலையிலும், மாவட்டக் கழகத்தினருக்கு ஒத்துழைப்பாகத் தனது அனுபவத்தால் வழிநடத்தி வந்த மகாதேவன் அவர்கள், 2013-ஆம் ஆண்டு ஜூலை 29-ஆம் தேதி, 77-வது வயதில் இயற்கை எய்தினார்.

அவரது மறைவுச் செய்தி கேட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் வெளியிட்ட இரங்கல் அறிக்கையில், 'என் உயிர்த் தலைவர் கலைஞர்' எனக் குறிப்பிட்டு, மகாதேவன் தன் உடல்நிலைகுறித்து எழுதி இருந்த கடிதத்தினைக் குறிப்பிட்டு நெகிழ்ந்திருப்பார். இன்றைய கழகத் தலைவர் வெளியிட்ட இரங்கல் அறிக்கையில், "அறிஞர் அண்ணா அவர்கள் தமிழறிஞர் வ.ரா. அவர்களை 'அக்ரஹாரத்து அதிசய மனிதர் வ.ரா' என்று புகழ்ந்து உரைத்தார்கள். அதேபோன்று, திருப்பத்தூர் அ.மகாதேவன் அவர்களையும் அக்ரஹாரத்தில் உதித்த அதிசய மனிதர் என்றால், அது மிகையாகாது" என்று புகழ்ந்தார். மகாதேவன் அவர்கள் மறைந்து 13 ஆண்டுகள் கடந்த நிலையில், ஒவ்வோர் ஆண்டும் மாவட்டக் கழகத்தினர் அவர் இல்லம் சென்று மரியாதை செய்கின்றனர். அதுதான் கழகத்தினர் அவர்மீது கொண்டிருக்கும் மரியாதை... ஈடுபாடு.

கழகத்தின் பல முன்னோடிகளும் தங்களின் கொள்கை உணர்வு, தியாகத்தால் நினைவுகூரப்படுவர். பேச்சு, எழுத்துகளால் நினைவுகூரப்படுகிறார்கள். ஆனால், மிகச் சிலரே தங்கள் வாழ்க்கை முழுவதும் வெளிப்படுத்திய கொள்கை விசுவாசத்தால் நினைவுகூரப்படுகிறார்கள். அந்த வரிசையில், திருப்பத்தூர் மாமா அ.மகாதேவன் அவர்கள், கழக வரலாற்றில் நிலைத்து நிற்பார்.

...துடிக்கும்

## அவலமான ஆட்சி நிர்வாகம்!

காவிரியில், தமிழ்நாட்டுக்கு உரிய நீரைப் பெறுவதற்கு முயற்சி செய்யாத த.வெ.க. அரசு, டெல்டாவில் புதிய சிக்கலை உருவாக்கியுள்ளதைக் கவனப்படுத்தியுள்ளார், அரசியல் விமர்சகர் விஜயபாரதி. நிலத்தடி நீர் மூலம் விவசாயம் செய்துவரும் விவசாயிகள் சந்தித்து வரும் அந்தப் பிரச்சினை, பெரும் நெருக்கடியை உருவாக்க உள்ளது. அவரது பதிவிலிருந்து...

'என் ஊரைச் சுற்றி 5 கி.மீ. சுற்றளவில், 8 கொள்முதல் நிலையங்கள் இருக்கு... எல்லா இடங்களிலும் 5,000-10,000 நெல் மூட்டைகள் திறந்த வெளியில் அடுக்கப்பட்டுள்ளன. 'எப்போதும் இவ்வளவு தேங்கி இருக்காதே' என்று அதிகாரிகளிடம் விசாரிக்கையில், "அதெல்லாம் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில், கொள்முதல் செய்தவை. அவற்றை நிரந்தரச் சேமிப்புக் கிடங்குகளுக்குக் கொண்டு சென்று, அங்கிருந்து அரவைக்கு அனுப்புவார்கள். வழக்கமாக ஆண்டு தொடக்கத்தில் அரவைக்கு ஒப்பந்தம் செய்யும் நிலையில், இந்த ஆண்டு தேர்தல் என்பதால், நிறுத்திவைக்கப்பட்ட டெண்டரை, இந்த ஆட்சி வந்தும் அதைச் செய்யவில்லை. அதனால் கிடங்குகளிலும் கொள்முதல் நிலையங்களில் இருந்தும் நெல் தேங்கியுள்ளது. அதனால், புதிதாக நெல் கொள்முதல் செய்வதிலும் தேக்கம் உள்ளது" என்கின்றனர் அதிகாரிகள். வழக்கமாக நிரந்தரக் கிடங்கு நிரம்பிவிட்டால், தற்காலிகக் கிடங்கு அமைப்பார்கள், அதையும் செய்யவில்லை. தவிர, நிரந்தரக் கிடங்குகளின் குத்தகைக் காலத்தையும், இந்த ஆட்சி நீட்டிக்கவில்லை எனப் பல சிக்கல்கள் எழுந்துள்ளன.

"தோராயமா டெல்டாவில் 800-900 நேரடி கொள்முதல் நிலையங்கள் இருக்கும். ஒரு மையத்துக்கு 5,000 மூட்டைகள் என்றாலும், 40 இலட்சம் மூட்டைகள் தேங்கி நிற்கின்றன. கிட்டதட்ட 400 கோடி ரூபாய் மதிப்புள்ள நெல் மூட்டைகளை அலட்சியமா போட்டு வைத்துள்ளது, த.வெ.க. அரசு. இந்த வேலைகளைச் செய்யும் அதிகாரிகளும் அதற்கான பணிகளைச் செய்யவில்லை. அரசு எந்திரம் முடங்கி நிற்கிறது" என்கிறார்.

முதலமைச்சர் விஜய், அமைச்சர்களுக்குப் போட்டியாக ரீல்ஸ் எடுத்துக்கொண்டிருக்கிறார். 'குறுவைக்கே இந்த லட்சணம்... சம்பாவுல என்னத்த பண்ண காத்திருக்காங்களோ' என கவலையைப் பகிர்ந்துள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### மொழிப்போரில் பங்கேற்ற உணர்வு!


க.நாச்சிமுத்து

ஒருங்கிணைந்த திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டத்தில் உள்ள கரைப்பாளையம் பூலாங்காடு என்ற இடத்தில், நிலச்சுவான்தார்கள் கட்டுப்பாட்டில் இருந்த அருந்ததியர் சமூகக் குடும்பங்களை அங்கிருந்து மீட்டு, வேலாயுதம்பாளையத்தில் குடி அமர்த்தி, அந்த இடத்திற்கு 'அண்ணா நகர்' என்று பெயர் வைத்தேன். இந்த நிகழ்ச்சியில், அண்ணா அறிவாலயம் கட்டட நிதியாக, வேலாயுதம்பாளையம் கிளைக் கழகம் சார்பில், ஒரு இலட்ச ரூபாய் வழங்கினோம். கழகத் தலைவர் கலைஞர் தலைமையேற்க, அன்பில் தர்மலிங்கம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர். புகலூர் கழகச் செயலாளராகவும், திருச்சிராப்பள்ளி மாவட்டக் கழகப் பிரதிநிதியாகவும் செயல்பட்டுள்ளேன். 1965-ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்புப் போரில் சிறை சென்றுள்ளேன். இப்போது 90 வயதாகும் நிலையிலும், கொள்கைப் பிடிப்புடன் இயங்கிவருகிறேன்.

**- க.நாச்சிமுத்து, கரூர் ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர், புகலூர் தமிழ்ச்சங்கத் தலைவர், வேலாயுதம்பாளையம், கரூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### கப்பல் அலங்கார வாகனத்தில்...

1961-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 13-ஆம் தேதி முதல் 16-ஆம் தேதி வரையில், மதுரையை அடுத்த திருப்பரங்குன்றத்தில், கழகத்தின் 'மூன்றாவது பொது மாநாடு' நடைபெற்றது. மாநாட்டுத் தொடக்க நாள் காலை 9 மணியளவில், மாநாட்டுத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களை ஊர்வலமாக அழைத்துச்செல்ல, மதுரை வண்டியூர் தெப்பக்குளம் பகுதியில் பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டிருந்தனர். கப்பல் போன்று அலங்கரிக்கப்பட்டிருந்த வண்டியில், அண்ணா, மதியழகன், சத்தியவாணி முத்து, கலைஞர் உள்ளிட்ட தலைமைக் கழக நிர்வாகிகள் அழைத்துவரப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900